**31.3.2021**

**Cr.M.P. 1214 /2021**

**சாட்சி – 1 தௌபிக்ராஜா, த/பெ. காஜா மைதின். சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

நான் புது ஆயக்குடியில் வசித்து வருகிறேன், கூலி வேலை செய்கிறேன்.எனது வீட்டிற்கும் தாஸன் மகன் துரை ராஜன் என்பவர் வீட்டிற்கும் இடையே சுவர் சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது. 09.07.2020ம்தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் துரைராஜ் எனது சுவற்று பக்கம் யார் வந்தாலும் வெட்டாமல்விடமாட்டேன் குத்தாமல்விடமாட்டேன் யார் வந்தாலும் பார்ப்பேன். எவன் வந்தாலும் கண்டதுண்டமாக வெட்டி போட்டுவிடுவேன் எவன் வந்தாலும் அஞ்சமாட்டேன் என்றும், எனக்கு ஆள் பலமும், அரசியல் பலமும் அதிகாரிகள் பலமும் இருப்பதாக சொன்னார். அவர் பொறியாளராக உள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பாக ஆயக்குடி காவல்நிலையத்தில் போய் புகாரினை சார்பு ஆய்வாளர் ஜெயபாண்டி என்பவரிடம் கொடுத்தேன். 09.07.2020ம்தேதி மற்றும் 10.07.2020ம்தேதி நான் சென்றபோதும் என்னை சார்பு ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. 10.07.2020ம்தேதி மாலை ஆய்வாளர் முத்துலட்சுமி என்பவரிடம் புகார் கொடுத்தேன். அவரும் போய்விட்டு பின்னர் வா என அலைக்கழித்தார்கள் அதனால் எனது பிழைப்புக்கு நான் செல்ல இயலவில்லை. நான் DSP காவல்நிலையத்திற்கு வந்தபோது நான் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விபரத்தை சொன்னேன். அதன்பிறகு என்னை விசாரணைக்கு வரசொன்னார்கள். துரைராஜிடம் எழுதி வாங்காமல் என்னிடம் எழுதி கேட்கிறார்கள். துரைராஜை உட்கார வைத்து பேசுகிறார்கள். நான் எழுதி கொடுக்க மறுத்துவிட்டேன். நான் வீடியோ ஆதாரம் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. உனது பேரை சொல்லி மிரட்டவில்லை வீட்டிற்கு போ உன்னை எதுவும் செய்ய மாட்டார் என்று சொன்னார். மீண்டும் துரைராஜ் விசாரணைக்கு போய்விட்டு வந்த அன்று மாலை தன்னை எதுவும் செய்யமுடியாது என்றும் அதிகாரிகள் தன் பக்கம் இருப்பதாக சொன்னார். பதிவு தபாலில் 15.07.2020ம்தேதி நான் புகார் கொடுத்தேன். ஆயக்குடி

காவல்நிலையத்தில் இதுவரை என்னிடம் எதுவும் கேட்கவில்லை. பதிவு தபாலில் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. துரைராஜ் வீட்டு வழியாக செல்லவேண்டியிருப்பதால் எனக்கு அச்சமாக உள்ளது. எனவே புகார்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.